2024 ஜூன் 25]

பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. கணினி உள்ளிட்ட சாதனங்களை அங்கு வைத்து பயன்படுத்த முடியாத நிலை இருக்கிறது.

மயிலாடுதுறை ஒரு புதிய மாவட்டமாகும். அங்கு R.D.O.-*க்கு இல்லமும் இல்லை. அவருடைய இல்லத்தை மாவட்ட ஆட்சியர் அவர்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார்.* R.D.O. *அவர்களுக்கு இல்லமும் இல்லை; அலுவலகமும் சரியாக இல்லை. நேற்றையதினம் பொதுப் பணித் துறை இதுகுறித்து திட்ட மதிப்பீடு அனுப்பியிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்தக் கோட்டாட்சியர் அலுவலகத்திற்கு ஒரு புதிய கட்டடத்தை கட்டுவதற்காவது அனுமதிக்க வேண்டுமாய் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகின்றேன்.*

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையிலிருந்து ஒரு மதிப்பீடு வந்திருக்கிறது. நீங்களும் எனக்குத் தகவல் கொடுத்திருக்கிறீர்கள். அதற்குரிய தகுந்த நடவடிக்கையை நிதித் துறையோடு கலந்து பேசி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று, நிச்சயமாக அதனைச் செய்து கொடுப்போம். உங்களுக்குத் தாலுகா அலுவலகமே புதிதாகக் கட்டிக் கொடுத்திருக்கிறோம். தற்போது* R.D.O. office *புதிதாகக் கேட்கிறீர்கள். இரண்டையுமே கேட்கிறீர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *ராஜகுமார் அவர்கள்.*

திரு. S. ராஜகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்ல மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, இடம் வாங்கி, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் கட்டி முடிக்கப்பட்டு, அதனையும் திறந்து வைத்துவிட்டார்கள். மேலும் இது புதிய மாவட்டம். வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டடம்;* Main Road-*ல் இருக்கக்கூடிய ஒரு கட்டடம் என்பதால் புதிதாகக் கட்டிக் கொடுக்க*

வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மிக முக்கியமான பல பிரச்சினைகளெல்லாம் R.D.O. அலுவலகத்தில் தீர்வு செய்யப்படுவதால், அதிகமான மக்கள் இங்கே வருவதால் அவர்களுடன் ஆலோசனைகள் செய்ய வேண்டியிருக்கிறது. பொதுப் பிரச்சினைகளையெல்லாம் தீர்க்கக்கூடிய இடமாக (Peace Committee) இக்கட்டடம் இருக்கின்ற காரணத்தினால், முக்கியத்துவம் அளிக்கும்படி தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரைப்போல் எல்லா உறுப்பினர்களும் தங்கள் பகுதிகளிலே R.D.O. Office வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நாங்கள் இன்றைக்கு C.R.A.-விடம் சொல்லி, எந்தெந்தக் கட்டடங்கள் மிக மோசமாக இருக்கின்றன; நீண்ட நாட்களான கட்டடங்கள் எவை எவை என்பதை ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, நிதி வாங்க வேண்டி கணக்கு எடுத்துக் கொண்டிருக்கிறோம். விரைவில் நீங்கள் நினைப்பது நடக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 83, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா வரிசை எண் 84, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.J. மணிக்கண்ணன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

84—

ஊரக வளர்ச்சி வங்கி

***84265—திரு. A.J. மணிக்கண்ணன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, திருக்கோவிலூர் தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியைப்

2024 ஜூன் 25]
பிரித்து உளுந்தூர்பேட்டை வட்ட தலைமையிடத்தில் புதிய வங்கி துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உளுந்தூர்பேட்டை தொகுதி, உளுந்தூர்பேட்டை வட்ட தலைமையிடத்தில் திருக்கோவிலூர் பகுதியிலிருந்து பிரித்து புதிய தொடக்க கூட்டுறவு, வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. A.J. மணிக்கண்ணன் அவர்கள்.

திரு. A.J. மணிக்கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டை வட்டப் பகுதியில் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி புதிய கிளை திறப்பதற்கு 1999 ஆம் ஆண்டு முன்மொழிவுகளெல்லாம் அனுப்பப்பட்டு, திருக்கோவிலூர் வங்கியிலிருந்து பிரிப்பதற்கு அவர்கள் தீர்மானங்கள் இயற்றி, வேண்டிய முன்மொழிவு அனுப்பப்பட்டிருக்கின்றது. அதனை மறுபரிசீலனை செய்யக் கேட்டுக்கொள்கிறேன். உளுந்தூர்பேட்டை பகுதியில் இயங்கிய உழவர் பணி கூட்டுறவுச் சங்கமானது தற்போது வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கமாக மாற்றப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்த வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் ஏறக்குறைய 22 கிராமப் பஞ்சாயத்துகளும், ஒரு நகராட்சிப் பகுதியும் பயன்படக்கூடிய வகையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அதனை இரண்டாகப் பிரிப்பதற்கு அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் சரகம், திருக்கோவிலூர் ஒன்றியத்தில் செயல்பட்டு வரும் || 68–திருக்கோவிலூர் தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, திருக்கோவிலூர் மற்றும் உளுந்தூர்பேட்டை வட்டங்களை விவகார எல்லையாகக்

கொண்டு செயல்பட்டு வருகிறது. மேலும், உளுந்தூர்பேட்டை தொகுதி, உளுந்தூர்பேட்டை வட்டத்தில் 19 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களும், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் கிளை ஒன்றும் உளுந்தூர்பேட்டையில் செயல்பட்டு வருகின்றன. மேற்படி வங்கியில் உளுந்தூர்பேட்டை தொகுதி, உளுந்தூர்பேட்டை வட்டத்தில் உள்ளவர்கள் இந்த 19 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் கிளை ஆகியவற்றில் நகைக் கடன், பயிர்க் கடன், கால்நடை பராமரிப்புக் கடன் போன்றவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். ஆகவே, பல்வேறு கடன்கள் குறைந்த வட்டி விகிதத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாக உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்றன. ஆகவே, புதிய கிளை துவங்குவதற்கான சாத்தியக்கூறுகள் அங்கே இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.J. மணிக்கண்ணன் அவர்கள்.*

திரு. A.J. மணிக்கண்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோன்று, உளுந்தூர்பேட்டை நகரப் பகுதியிலுள்ள வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின்மூலம் 22 கிராமப் பஞ்சாயத்துகளும், ஒரு நகராட்சி பகுதியும் பயன்பெறக்கூடிய வகையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்தக் கிராமத்தில், ஒரே இடத்தில், இத்தனை கிராமப் பஞ்சாயத்துகளும் வந்து பயன்பெறுவது என்பது மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, அதனை இரண்டாகப் பிரிப்பதற்கு அரசு முன்வருமா என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.*

முற்பகல் 10–05

அடுத்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், எங்கள் மாவட்ட பொறுப்பு அமைச்சர் அவர்களும் நேற்றையதினம் உளுந்தூர்பேட்டையிலுள்ள சர்கார்ஜாகா நிலத்திற்குப் பட்டா வழங்கப்படும் என்று அறிவித்திருக்கின்றார்கள். அவர்களுக்கு என்னுடைய மனப்பூர்வமான நன்றியையும், வணக்கத்தினையும் தெரிவித்துக்கொள்கிறேன். நீண்டநாள் பிரச்சினையாக இருந்ததை நிறைவேற்றித் தந்தமைக்கு, பணிவன்புடன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இந்தக் கூட்டுறவு வங்கியை இரண்டாகப் பிரிப்பதற்கு

2024 ஜூன் 25]
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நியாயமானது. அதேநேரத்தில் கூட்டுறவு வங்கிகளுடைய சேவை குறிப்பாக, கிராமப் பகுதிகளில் இருக்கக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்கள், பொருளாதாரத்தில் விளிம்பு நிலையில் இருக்கக்கூடியவர்களின் பயன்பாட்டிற்கு மிகவும் அவசியம். ஆனால், கடந்த பல காலங்களாக இந்தக் கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிக்கு புதிய கிளைகள் எதுவும் தொடங்கப்படவில்லை.

தமிழகத்தில் ஏறத்தாழ 180 வங்கிகள், LD bank (Land Development Bank)-நில வள வங்கி என்று அழைக்கப்பட்ட அந்த வங்கிகளுக்கு, இடைக்காலத்தில் அதன் நிதியாதாரங்கள் குறைந்தது. மேலும் இந்த வங்கிகளுக்கு, NABARD (National Bank for Agriculture and Rural Development) போன்ற அமைப்புகள் குறைந்த வட்டியில் கடன் தருவதை நிறுத்திவிட்ட காரணத்தால், இடைப்பட்ட காலத்தில் அந்த வங்கிகள் தொடர்ந்து ஆரோக்கியமாகச் செயல்படுவதற்கான வாய்ப்புகள் இல்லாத சூழ்நிலை இருந்தது. தற்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, முதற்கட்டமாக அந்த 180 வங்கிகளுக்கும் புத்துயிர் ஊட்டி, ஆரோக்கியமான நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்று முனைப்போடு செயல்பட்டு வருகிறோம். ஆனாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் நியாயத்தை உணர்ந்துள்ளோம். LD bank-ஐ தவிர்த்து, 19 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் இருக்கின்றன. மேலும், ஒன்று, இரண்டு தேவைப்பட்டால் தொடங்கலாம். அதைப்போல, நகர்ப்புர வங்கிகள் இருக்கின்றன. அவற்றினுடைய கிளைகளையும் துவக்கலாம். ஆகவே, LD bank-ஐ தற்போது திறப்பதற்கான சாத்தியங்கள் இல்லை. தேவைப்படின், புதிய வங்கிகள் அதாவது, தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் தொடங்கப்படும் என்பதையும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் விருப்பத்திற்கேற்றவாறு நிறைவேற்றி தரப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.